[1975 நவம்பர் 5

திரு. கு. காமாட்சி : பொதுவாக எவ்வளவு தொலைவு சாலைகள் பெருவழித்துறையின் கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போது நிதிப்பற்றுக் குறை காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பஞ்சப்பட்டியில் இருந்து மைலம்பட்டி செல்லும் சாலை 16 ஆண்டுகளுக்கு முன்பு செப்பனிடப்பட்டது. அதற்குப் பிறகு செப்பனிடும் பணி நடைபெறவில்லை. இனிமேலாவது செப்பனிட அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : காரணம், நிதிப் பற்றுக் குறை ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

மயிலம்—நல்லாவூர் சாலையில் பாலம்

* 190 வினா—**திரு. ந. முத்துவேல் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் மயிலம்—நல்லாவூர் சாலையில் தென் கோடிப்பாக்கம் ஏரியின் குறுக்கே உள்ள கலிங்கலுக்குப் பதிலாக பாலம் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த தென்கோடிப்பாக்கம் என்னுடைய துறைப்பாக்கம் தொகுதிக்கு நெருக்கத்தில் உள்ளது. இங்கே செய்யப்படுகிற பணியினால் என் தொகுதிக்கும் நன்மைகள் உண்டு என்ற காரணத்தினால் அரசு உடனடியாக இதில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திரு. பாலசுந்தரம் தொகுதி என்பதற்காக தனிச் சலுகை காட்ட இயலாது.